செ.வெ.எண்: 175/2018

30-04-18

## மாவட்ட ஆட்சியர் செய்திக் குறிப்பு

தமிழக அரசின் கலை பண்பாட்டுத் துறை மூலம் ஓவிய, சிற்பக் கலைகளை மேம்படுத்திட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. சிறந்த ஓவிய, சிற்பக் கலைஞர்களுக்கு கலைச்செம்மல் விருதுகள் வழங்குதல், மாநில அளவிலான ஓவிய, சிற்பக் கலைக்காட்சி நடத்துதல், தனி நபர்/கூட்டுக் கண்காட்சி நடத்திட நிதியுதவி வழங்குதல் போன்ற கலைப்பணிகள் கலை பண்பாட்டுத் துறையின் மூலம் நடைபெற்று வருகிறது.

கலை பண்பாட்டுத் துறையின் கீழ் செயல்படும் ஏழு மண்டலக் கலைப் பண்பாட்டு மையங்களில் ஆண்டுதோறும் ஓவிய–சிற்பக் கலைக்காட்சி நடத்திட அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. காஞ்சிபுரம், திருவண்ணாமலை, வேலூர், திருவள்ளூர் மற்றும் சென்னை மாவட்டங்களை உள்ளடக்கிய காஞ்சிபுரம் மண்டலக் கலை பண்பாட்டு மையம் சார்பில் கலைக்காட்சி காஞ்சிபுரத்தில் நடத்தப்பட உள்ளது. இக்கலைக் காட்சியில் பங்கு பெற விருப்பம் உள்ள ஓவிய–சிற்பக் கலைஞர்கள், கலைக்காட்சியில் இடம்பெறத்தக்க கலைப் படைப்புகளின் புகைப்படத்தினையும், தங்களின் சுய விவரக் குறிப்புகளையும் (பெயர், முகவரி, செல்பேசி எண் மற்றும் தொடர்புடைய விவரங்கள்) மண்டல உதவி இயக்குநர், கலை பண்பாட்டுத் துறை, மாவட்ட அரசு இசைப்பள்ளி வளாகம், (காது கேளாதோர் பள்ளி அருகில்) சதாவரம், காஞ்சிபுரம் – 631 502 என்ற முகவரிக்கு வரும் 18ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் விவரங்களுக்கு காஞ்சிபுரம் மண்டல கலை பண்பாட்டு மைய அலுவலகத்தை 044–27290735 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

தேர்வுக்குழு மூலம் தேர்வு செய்யப்படும் கலைப்படைப்புகள் உரிய கலைஞர்களிடமிருந்து பெறப்பட்டு கலைக்காட்சியில் வைக்கப்படும். சிறந்த கலைப்படைப்பிற்கு முறையே முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுகள் தலா 10 கலைஞர்களுக்கு வழங்கப்படும்.

30/4/18

மண்டல உதவி இயக்குநர்
மண்டலக் கலை பண்பாட்டு மையம்,
காஞ்சிபுரம்.

மாவட்ட ஆட்சியர்,
காஞ்சிபுரம்.

2/3